கத்தோலிக்க வாரவெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 15

சித்திரை 22 — 1972

பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## ஆர்மேனிய "ஒதொடக்ஸ" தலைவர் வத்திக்கான் விஜயம்

இரு வாரங்களின்முன், ஆர்மேனியதேச "ஒதொடக்ஸ்" கிறீஸ்தவசபைத் தலைமைப் பிதாக்கள் மூவர் வத்திக்கான் சென்று பரிசுத்த தந்தையைத் தரிசித்தனர். ஆர்மேனிய ஒதொடக்ஸ் பிதாக்கள் பரிசுத்த தந்தையைத் தரிசிக்கச்சென்றது இதுவே முதல் முறையாகும். ஆர்மேனிய அரசாங்கம் வத்திக்கானுடன் அரசதூதுவர் தொடர்புகள் இன்னும் கொண்டிருக்கவில்லை. இது காலவரையும் கத்தோலிக்க சமயத்தவர் அத்தேசத்தில் துன்புறுத்தப்பட்டவகையை சீனு தேசத்துடனேயே ஒப்பிட்டுப் பேசலாம். ஆகவே அத்தேச அரசாங்க சம்மதியுடன் அப்பிதாக்கள் வத்திக்கான் சென்றது, வத்திக்கானுடன் அதன் தொடர்புகள் முன்னிலும் சீராகுமென்பதற்கு ஒரு அறிகுறியெனக் கருதப்படுகிறது. பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் ஆர்மேனிய பிதாக்களை அன்புடன் வரவேற்று, உபசரித்து உரையாடி வழியனுப்பினர். வத்திக்கானுடன் ஆர்மேனிய அரசாங்க தொடர்புகள் சிநேகபான்மையானவையாயிருப்பதை தான் விரும்புவதாக அவர்களுக்கு வற்புறுத்தினர்.

### இருநூறில் ஒன்று பெருந்தொகையா?

சென்ற சில வருடங்களாக பெருந்தொகையான குருமார் தமபதவியை விட்டுவிட்டார்கள் என்ற பெருங்கூக்குரல் கத்தோலிக்கர்களுக்கு ஏமாற்றம் அளிக்க இடமேயில்லை. வத்திக்கானால் தயாரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி அரைச்சத விதமான குருமாரே இவ்வாறு பதவியை விட்டவர்கள் 200 குருமாரில் ஒருவர் மாத்திரம் இவ்வாறு விட்டாராயின் அதைப் பெருந்தொகையெனக் கொள்வதில் அர்த்தமேயில்லை. சென்ற 6வருடகாலமாக உள்ள 425,000 குருமாரில், பதவியை விட்டவர்கள் 2241 பேர் மாத்திரமே

### மறைவல்லுனர் சிலரும் பாப்பரசர் கண்டனமும்

கத்தோலிக்க சமயவிசுவாசங்கள் சிலவற்றில் மக்களின் மனம் தத்தளிக்கச் செய்யும் வகையில் விளக்கங்கள் சில கத்தோலிக்க மறைவல்லுனர் அண்மையில் கொடுத்த முறையைப் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரும் விசுவாச கருமகாரியாலய வத்திக்கான் அதிபர்களும், உறைப்பான முறையில் கண்டித்ததை நேயர்கள் அறிவர். இக்கண்டனத்தால் வெந்துபோன சிலமறைவல்லுனர் மேலும் தமது அபிப்பிராயத்தை விளக்கி ஒரு வெளியீடு அம்பலப்படுத்தியிருக்கின்றனராம். இந்த வெளியீட்டுக்குக் கைச்சாத்திட்டிருப்பவர் தொகை முப்பத்திமூவர் மாத்திரம் என்பதையும், இத்தொகை ஒரு காலம் ஐஞ்ஞூறு என்றும், பின்பு முன்னூறு என்றும் பேசப்பட்டுவந்ததையும் இப்போது 33 மாத்திரம் என்று குறிக்கப்படுவதையும் வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டி, இவ்வெளியீடு பாப்பரசரது பிரதம காரிய தரிசிக் கருதினல் விலோவின் கைக்கு இன்னும் எட்டாதிருப்பதையும் குறிப்பிட்டு, இதனல் பிரதானமற்ற அதன் தன்மை வெளியாகிறது என்றும் அறிவித்தார்.

## பாதிரியாரும் செபமாலையும்

இத்தாலியிலே மெதடிஸ்ற் சபைப் பாதிரியார் ஒருவர் மாதாவின் செபமாலையைப் பற்றி அருமையான புத்தகம் ஒன்று எழுதி வெளியிட்டிருக்கிருரெனில் இதனைப் பலரும் நம்பமாட்டார்கள். ஆனல், அஃது ஓர் உண்மைச்சம்பவமாகும். அங்கு 30 ஆண்டுகளாக ஒரு மெதடிஸ்ற் சபைப் பாதிரியாராய் இருந்துவருகின்ற கனம் ஜே. நெவில் வாட் அவர்கள் செபமாலையைப்பற்றி எழுதிய புத்தகத்தைப் படித்தவர்களில் ஆச்சரியப்படாதாரில்லை.

அவர் தம்முடைய புத்தகத்தின் முதலாம் பக்கத்திலே தமது சகாக்களுடன் சிநேகபூர்வமான ஒரு சூழலை உண்டுபண்ணி, "மெதடிஸ்ற் சபையினர் தேவதாயாரைப் பற்றி மௌனம் சாதிப்பது உள்ளபடியே அவர்கள் கேள்விப்படா திருப்பதேயாகும்; ஆனல் நான் செபமாலை சொல்லத் தொடங்கியதிலிருந்து மாதாவின் செபமாலை இரகசியங்களைப்பற்றி எனக்கிருந்த பயமும், பலவீனமும் அகன்றுபோயினவென்று வரைந்திருக்கிருர். மேலும் "அது வெறும் செபல்ல, ஆனல், அது பரிந்துபேசுதற்கும் தியானத்துக்கும், மனுப்பண்ணுவதற்கும் ஒத்தாசையாயிருந்து தேவ இரகசியங்களைப்பற்றிச் சிந்திக்கச்செய்கின்றது" என்று அவர் எழுதுகின்ருர்.

இப் புத்தகத்திலே செபமாலை இரகசியங்களைப் பதினைந்தாக அவர் வகுத்திருக்கின்ருர். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தலையங்கம் கொடுத்திருக்கிருர். பதினைந்து அதிகாரங்களிலே அதனை விளக்கிக்காட்டியிருக்கிருர். முதல் ஐந்து வியாகுல இரகசியங்களையும், ஏனைய பத்தும் சந்தோஷ இரகசியங்களையும் விரித்துக்காட்டுகின்றன. ஈற்றில், "செபமாலை ஒருவரின் ஆத்மீக வாழ்வுக்கு நிறைந்தஉதவியாகு"மென்று முடித்திருக்கின்ருர். செபத்தினதும், ஒரு பாதிரியாராயிருந்து பெற்ற நெடுங்கால அனுபவத்தினதும் நினைவே இவையெல்லாமென்று அவர் கூறுகின்ருர். பரிசுத்த கன்னி மரியாயின் கிறிஸ்தவ ஐக்கிய சபையில் ஓர் உறுப்பினரான அவர் எழுதிய இப் புத்தகம் கிறிஸ்தவ ஐக்கியத்திற்குப் பெரும் பலனளிக்குமென நம்பப்படுகிறது.

### எமது சுயாதீனத்தைப் பறிக்காதீர்

சோவியற் ருஷியாவின் ஒரு சிறு பாகமாகிய லிதுவேனியாவிலுள்ள கத்தோலிக்கர் ஐக்கியதேச ஸ்தாபன பொதுச் செயலாளர், சேட் வல்டீம் மூலமாக ருஷிய தேச கொமியூனிஸ்த கட்சித்தலைவர் பிறெஸ்னேவுக்கு தமது சமய சுயாதீனத்துக்கு ஏற்பட்டுவரும் இடையூறுகளை நீக்க விண்ணப்பித்திருப்பதாக செய்திகள் சில கூறுகின்றன. ருஷியதேச அரசியல் சட்டத்தின்படி வாக்குப் பண்ணப்பட்டிருக்கும் மனச்சாட்சிச் சுதந்தரம் லிதுவேனியாவில் நடைமுறையில் செயற்படாதிருப்பதை அங்குள்ள 17,0000 கத்தோலிக்கர் எடுத்துக் காட்டியிருக்

## 23-ம் அருளப்பரின் புனித பட்டத்துக்கு டிகோலின் சாட்சி

23-ம் அருளப்ப பாப்பரசரின் முத்திப்பேறுபெற்ற பட்டத்துக்கு ஆகவேண்டிய பிரதான சாட்சிகளுள் ஒருவர் காலஞ்சென்று போன பிரான்சுதேச அதிபர் டிகோல் என்பவரே. மரணத்துக்கு முன்பு டிகோல் அவர்களிடம் அறியவேண்டியன பெறப்பெற்று விட்டன. இச் சாட்சிப்பத்திரப பாரிஸ்நகர அதிமேற்றிராணியார் வசம் இருப்பதாகவும் இன்னும் சில மாதங்களுள் வெளிப்படுத்தப்படுமெனவும் கூறப்படுகிறது. 1945-ம் ஆண்டு பிரான்சு தேசத்துக்கு பாப்பரசரின் அரசதூதுவராக இருந்த றன்காலி அதிமேற்றிராணியாரே 23-ம் அருளப்பபாப்பரசர். அக்காலத்தில் பிரான்சு தேசத்தில் டிகோல் அவர்களது கட்சியே பிரபலம்பெற்றது. ஆகவே டிகோல் அவர்களுடன் 23-ம் அருளப்ப பாப்பரசர் நெருங்கிய தொடர்புடையவராயிருந்தார். 2-ம் உலகயுத்த காலத்தில் பிரான்சுதேச மேற்றிராணிமாரிற் சிலர் மாஷல் பெற்ருனுடைய விச்சி அரசாங்கத்தை ஆதரித்து வந்ததால் அம்மேற்றிராணிமாரையும் டிகோல் அரசாங்கத்தையும் தொடர்புபடுத்தும் சிக்கலான வேலை அவ்வமயம் றன்காலி அடிகளார் பொறுப்பாயிருந்தது.

### கிறீஸ்தவ போதகர் மேல் தென் ஆபிரிக்க அரசாங்க கோபம்

1968-ம் ஆண்டின் தொடக்கத்தின்பின் தென்ஆபிரிக்க அரசாங்கம் சுமார் 80 கிறிஸ்தவ போதகர்மேல் கடுமையான நடைமுறைகள் எடுத்திருக்கின்றது. நியாயம் யாதெனில் அவ்வரசாங்கத்தின் நிறத்துவேஷக் கொள்கைக்கு அவர்கள் எதிர்ப்புக் காட்டியதே. இவ்வாறு தண்டிக்கப்பட்ட போதகர்களில் அங்கிளிக்கன்சபையினர் 40; லூதறன்ஸ் 13; மெதடிஸ்றஸ் 11; கத்தோலிக்கர் 11; பிற கிறிஸ்தவ மதபோதகர்களும், இஸ்லாமியரும் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். தண்டனைகளும் பலவகைப் பட்டன, நாடு கடத்தல், சிறைவாசம், இல்லத்தடை பிரயாணத்தடை முதலியன.

### யூகோசிலேவியாவுக்கு பாப்பரசரின் பாராட்டு

சில வாரங்களின்முன் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பபாப்பரசருக்கு யூகோசிலாவியாவின் அரசதூதுவர் திரு. கொல்மன் அவர்கள் தமது நியமன பத்திரங்களைச் சமர்ப்பித்தபோது பரிசுத்த தந்தை யூகோசிலாவாக்கிய தேசத் தலைவர் மாஷல் றீற்ருே அவர்கள் உலகத்தில் நீதியான சமாதானம் நிலவ எடுத்துவரும் பெரும் முயற்சிகளைப் பாராட்டினர். சமாதானம் நிலவ உலகத்தில் நீதி அவசியமெனவும், சிறுபான்மையினராயுள்ள சமூகத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படுவது அந்நீதியில் அடங்கியிருக்கிறதென்றும் கூறினர். யூகோசிலாவியாவைப் பொறுத்தவரையில் அத்தேசத்தில் இத்தகைய நீதிநிலவுவது பாப்பரசருக்கு திருப்தி அளித்திருக்கின்றது.

## எசமானே தன்சமூகத்தின் ஊழியன்

பிரான்சு தேசத்திலிருந்து பரிசுத்த பாப்பரசரைச் சந்திக்க அண்மையில் வத்திக்கான் சென்ற பல தொழிற்சாலை அதிபர்களுக்கு அளித்தபேட்டியில் 6-வது சின்னப்பதந்தை திருச்சபையில் அதிகாரம் வகிப்பவர்களையும் தொழில் துறைகளில் அதிகாரம வகிப்பவர்களையும் சமநிலையில் வைத்து யார் அதிகாரிகளாய் இருக்கிருர்களோ அவர்கள் தத்தம் சமூகத்தின் ஊழியர்கள் என்பதை எப்போதும் மனதில் வைத்திருக்க வேண்டுமெனத் தெளிவாக எடுத்துக் காட்டினர். மேலும் தொழிலாளர்கள் தத்தம் ஸ்தாபனங்களின் பரிபாலனத்தில் பங்குகொள்ளவிருப்பமுடையவராயின் அதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்வதினல் அதிகாரிகள் நன்மை அடைவதன்றி தீமையல்ல என்பதையும் விளக்கியருளினர். சென்ற 50வருடகாலத்தில் பல பாப்பரசரும் வெளிப்படுத்திய சமுதாய நீதிகள் பலவற்றையும் ஆராய்ந்து அவை நடைமுறையில் செயல்படத் திட்டம் தயாரிக்க பிரான்சு தேச மேற்றிராணிமார் சங்கம் நிபுணர் சிலர் அடங்கிய ஒரு குழு ஒன்றை நியமித்திருப்பதுபற்றி பரிசுத்த தந்தை தமது சந்தோஷத்தைத் தெரிவித்தார்.

... கின்றனர். சமயபோதகம் செய்யும் குருமார் சிலர் சிறைப்படுத்தப் பட்டதும், விசாரணையின்றி இரு மேற்றிராணிமார் நாடுதரத்தப் பட்டதும், கத்தோலிக்க போதகத்துக்கு தடைவிதிக்கப்பட்டிருக்கும் அதேசமயம் அரசாங்க பள்ளிக்கூடங்களில் நிரீஸ்வரவாதம் கட்டாயமாகப் போதிக்கப்படுவதும் அவ்விண்ணப்பத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

### பருகுவேயில் மேலும் ஒரு குரு நாடு துரத்தப்பட்டார்

தென்அமெரிக்க கண்டத்தில் பருகுவேப் பிரிவுப் பொலிசார் அத்தேசத்தில் தேவதொண்டு செய்துவந்த ஒரு யேசுசபைக் குருவானவரைக் கைப்பற்றித் தூஷித்து, நையப்புடைத்து அந்நாட்டிலிருந்து துரத்திவிட்டனர். குருவானவர் வண. வின்சென்ற் பறெறருே சுவாமியார் என்பவரே. அவரது குற்றம் வறியவர்களுக்காக

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சத்தியவேத பாதுகாவலன்

# செபிப்பது எப்படி ?

கிறிஸ்து நாதருடைய சீடர்களுக்கும் எங்களைப் போலவே ஒரு பிரச்சினை இருந்தது அவர்கள் செபம் செய்ய விரும்பினார்கள். செபத்தின் அவசியத்தை உணர்ந்தார்கள். செபமின்றி இறைவனோடு தொடர்பு கொள்ள முடியாமையினால், செபமில்லா வாழ்வு எவ்வளவு வெறுமையானது என்பதை உணர்ந்தார்கள். ஆனால், செபம் செய்வது அவர்களுக்குச் சுலபமாக இருக்கவில்லை. ஆகவேதான் தம் குருவிடம் தமக்கு செபம் செய்யக் கற்றுக் கொடுக்குமாறு கேட்டனர்.

இத்தகைய வேண்டுகோளே ஒரு செபமாகும். "ஆண்டவரே, எமது வாழ்வில் செபத்தின அவசியத்தை உணர்கிறோம். செபம் செய்ய ஆசைப்படுகிறோம். ஆனால், எம்மால் முடியவில்லை. ஆகவே எமக்கு நீர் உதவி செய்தருளும்"என்னும் வேண்டுதலே ஒரு செபமாகும். கிறிஸ்துவின் சீடர்களைப் போலவே எமக்கும் செபம் செய்வது கடினமாயிருந்தால் செபிப்பது எப்படி என்று எமக்கு கற்பிக்குமாறு இறைவனிடம் வேண்டுவோமாக. எமக்கே உரிய பாணியில் இறைவனோடு நாம் தொடர்பு கொள்ளக் கூடிய விதத்தில், எமது சொந்த மொழிநடையில் எமது இடைஞ்சல் இக்கட்டுகளையும இன்பதுன்பங்களையும் அவருக்கு எடுத்துக்கூறும் முறையில் செபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"எம்மை நேசிக்கும் இறைவனோடு நட்புரிமை கொள்வதுதான் செபம்"என்று 'புனித அவிலா தெரேசம்மாள் கூறியிருக்கிறார். இறைவன் எமது நண்பராக இருந்தால் எமது சுகதுக்கங்கள் யாவும் அவருடையவையே. எம்மில் அக்கறை கொண்டவராயும் எமக்கு உதவி புரிய ஆவலுள்ளவராயும் இருப்பார் என்பது தெளிவு. செபம் அவரோடு தொடர்பை ஏற்படுத்தி எமக்குத் தேவையான வழிகளில் அவர் உதவி புரிவதற்கு வழி செய்கிறது.

செபம் செய்வதற்கு ஆலயம் செல்லவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆலயத்தில் திவ்விய நற்கருணையின் முன்பு செபம் செய்வது சிறந்தது என்பது உண்மையே. இறைவனின் பிரசன்னத்தை, அவர் எமக்கு மிகஅண்மையில் இருப்பதை அங்கு உணரக்கூடியதாயிருக்கிறது. ஆயினும் எந்தச் சூழ்நிலையிலும் செபம் செய்யலாம். இறைவன் எல்லா நேரங்களிலும் எமக்கு மிக அண்மையில், எம்மிலேயே இருக்கின்றார். நாம் அவரை நோக்கித் திரும்ப வேண்டியதுதான், அவர் எம்மை அரவணைக்கக் காத்திருக்கிறார்.

செபம் என்பது ஒருவரின் சொற்பொழிவு அல்ல. அது இருவரின் சம்பாஷணையாகும். நாம் இறைவனுக்கு எமது பிரச்சினைகளைக் கூறுவது மட்டுமல்ல அவரது குரலுக்குச் செவிகொடுப்பதும் செபத்தின் ஒரு பகுதியாகும். சில சமயங்களில் நாம் ஒரு மிக நெருங்கிய நண்பரோடு உரையாடா விட்டாலும் அவர் பக்கத்தில் இருப்பதையே ஓர் இன்பமாகக் கருதுகிறோம். அதேபோல் நீண்ட செபங்களைச் சொல்லாத வேளையிலும் ஓரிரண்டு, வார்த்தைகளாலும், நீண்ட மௌனத்தாலும இறைவனின் பிரசன்னத்தில் இருப்பதையே ஒரு பேறாகக் கருதுவோம்.

எவ்விதத்தில் செபம் செய்தாலும் இறைவனுடன் தொடர்பு கொள்ள அது உதவுமானால் அதுவே எமக்கேற்ற செபமாகும்.

## உண்மையான சகோதரத்துவம் எங்கே ?

தென்அமெரிக்க கண்ட பிறேசில் தேசமேற்றிராணிமாரின் தேசியசபையின் ஆதரவுடன் அங்கு நடந்துவரும் சகோதரத்துவ இயக்க கொண்டாட்டத்துக்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் அனுப்பியிருக்கும் செய்தியில் உண்மையான சகோதரத்துவத்துக்கு சுயநலமற்ற சேவை மிக அவசியம் என்பதை வற்புறுத்தியிருக்கிறார். அந்த இயக்கத்தின் விருது வார்த்தைகள் "சேவையில் மகிழ்ச்சி காண்போம்"என்பனவே. பிறேசில் தேச இளைஞர் மத்தியில் தோன்றியிருக்கும் தேசிய உணர்ச்சியின் பயனாக நாடு நலன் பெற வேண்டுமென்றும் அதை எய்த மக்கள் மத்தியில் சுயநலனற்றசேவை அவசியமென்றும் பரிசுத்த தந்தை குறிப்பிட்டிருக்கின்றார். அயலவரைத் தம் சகோதரரென மதித்து அவர்களது துன்பத்தை நீக்க முயல்வதிலேயே உண்மையான சேவை அடங்கியிருக்கின்றதெனக்கூறிய தந்தை பிறேசில்தேசஇளைஞரை அப்பாதையில் நடக்கத் தூண்டியிருக்கின்றார்.

# பரமபதமடைந்தவரான
# வண. பிதா எல். ஜே. அகஸ்ரீன், அ.ம.தி. அடிகளார்

யாழ்நகர் மேற்றிராசனத்தின் பல்வேறு விசாரணைப் பங்குகளிலும் பிறமாகாணங்களிலும் தமது 80ஆம் பாராயம் வரையும் அரிய குருத்துவத் திருப்பணியாற்றிய ஆன்மகுரு, அன்பின் திருஉருவம, அமலோற்பவ சபைத்தியாகி ஞானமழையும், கானமழையும ஒருங்கே புரிந்த கலைமேகம வண. சுவாமி L. J. அகஸ்ரீன் அவர்கள் 1972-ம ஆண்டு சித்திரைத் திங்கள் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை இறைவன் திருவடி நீழல் சேர்ந்தார்.



தேவனின் திராட்சைத் தோட்டத்தில் தேவதாயாரினால் விசேடமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட புனித பூமி யாழ்ப்பாணம, ஏனெனில, அமலோற்பவசபைத் தியாகிகள் பலரை, மேற்றிராணிமாராகவும், குருமாராகவும், சந்நியாசிகளாகவும் பெற்றெடுத்த பெருமை யாழ்ப்பாணத்துக்கே உரியது. அச்சபையின் சுவைக்கனிகளில் ஒருவராகத் திகழ்ந்து அருந்தொண்டாற்றி, திருமறைப் புகழ்பரப்பியவர் அகஸ்ரீன்சுவாமியவர்கள்.

அவரது பிரிவால் கத்தோலிக்க உலகு ஓர் அரிய குருமணியை, ஆன்மீக தலைவனை, ஞானதளபதியை, இசைமேதையை, பிரசங்க சிங்கத்தை, ஒப்பற்ற தியாகியை, நலலாசிரியனை இழந்துவிட்டது.

மகிமை நிறைந்த அக்குருதிலகத்தின் சாந்தங் கனிந்த பார்வையும், அன்பும் இனிமையும் கலந்த உரையாடலும, அரவணைப்பும், பழகும் அழகும் எவரையுங் காந்தம் போலக் கவர்ந்திழுக்கும். சம்பத்திரிசியார் கல்லூரி விடுதிச்சாலைத் தலைவராகச் சுவாமியவர்கள் கடமையாற்றிய காலத்தில் அவரது ஞான மேய்ப்பின்கீழ்ப் பயிற்றப்பட்ட இளைஞர்கள் பலர் சிறப்பாகப் பிறசமய மாணவர்கள் அவரது அன்பின் உள்ளத்தாலும் தூய தாயுள்ளத்தாலும வசீகரிக்கப்பட்டார்கள். அவரது சாங்கோபாங்க சீவியத்தின் நல்வழி காட்டுதலைப் பெறும் பெரும் பாக்கியம் பெற்றார்கள். இன் [illegible] கல்லூரியின் வெற்றிகள் பலவற்றுக்கும் சுவாமியாரவர்களே அடித்தளமாக நின்று நற்பணியாற்றினார்கள்.

அவர் புனித வாழ்வுமட்டுமன்று, போதகச் சிறப்பும் புகழுக்குரியது. எங்கெங்கு ஞானஒடுக்கம் நிகழ்ந்தாலும் அங்கங்கெல்லாம் சுவாமியாரின் வெண்கலக் குரலின் நாதம் முழங்கும். பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் அவரது ஞான அறிவின் பூரண ஆழத்தைப் பிரதிபலிக்கும். "உலகெங்கும் போய்ச் சுவிசேஷத்தைப் போதியுங்கள்" என்று கூறிய யேசுவின் திருவாக்குக்கு இலக்கியமாகத் திகழ்ந்து அவர் மகிமையைப் பரப்புவதில் என்றும் அயராது உழைத்தார். அவரது எடுப்பான தோற்றமும், அறிவுத் திறனும், ஆன்மதத்துவமும், சிம்மக்குரலும் ஞான ஒளியும், அவருக்கு ஞான ஒடுக்கபோதகர் என்ற விருதுப் பெயரையும் ஈட்டித் தந்தன.

சுவாமியார் நாவலன் மட்டுமன்றிச் சிறந்த பாவலனுமாக விளங்கினார். ஆலயங்களில் திருப்பலி வேளைகளில் அவர் வீணையொலியோடு பாடவாய் மலர்ந்தால் இசையமுதம் ஆலயம எங்கும் பொங்கி எதிரொலிக்கும. இசைவெள்ளத்தால் அவர் மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்வார். "இன்னிசை மன்னன்" என்று எல்லோரும் ஏகோபித்து அவரைப் பாராட்டினர்.

அவர் வாய்திறந்து செபித்தால் ஏககாலத்தில் பல வாத்தியங்கள் கானம்பொழிவது போல இனிமை தேங்கும். மருதமடுத் திருப்பதியில் தாயாரின் கடைசி வெற்றிப் பவனி முடிந்ததும், மடுத்தாயின் அடைக்கலச் செபத்தை சுவாமியார் செபிக்கத் தொடங்குவார். அவ்வேளை மக்கள் குழாம் மெய்சிலிர்த்து, உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர்சிந்திக் கதறியழுவார்கள். இன்னும் அந்தக் குரலின் மதுரகீதம் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டே யிருக்கின்றது.

இத்துணைத் திறனும் வல்லபங்களும, ஞானக்கொடையும் நிறைந்த அவர் பொறுமையின் பூமி, அமைதியின் சிகரம், அடக்கத்தின் விளைநிலம், தாழ்ச்சியின் பழமரம். எத்தருணத்தில் எவ்வளவுசிக்கல்கள் நேரிட்டபோதிலும் அவர் இதயங் கலங்கார். எத்தகைய பிரச்சினையையும் மிக்க அமைதியுடன் மேற்கொள்வார். வெறுப்போ வேதனையோ முகமடிவோ கவலைக் குறியோ அவர்முகத்தில் எள்ளளவும் படியா. களங்கமில்லாச் சந்திரன்போல எப்போதும் அவர் முகத்தில் புன்முறுவலும், சாந்தமும் தவழும்.

அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவதில் அவர் அதிகாரியாய் விளங்கினார். தலைவர்களின் கட்டளையை ஏற்றுக்கொள்வதில் அவர் தலைவராய் இலங்கினார். எப்படி அவர் தமக்கு மேலானவர்களை மதித்தாரோ அப்படியே அவருக்குக் கீழ்ப்பட்டோர் அவரை மிகவும் கண்ணியத்துடன் கௌரவித்துப் போற்றினர்.

காம்பொன்பதியைத் தாயகமாகக் கொண்டுபிறந்த சுவாமியார் அவர்கள் பிறப்பிலே வந்த சிறப்புடையவர்; கருவிலே அமைந்த திருவுடையவர். தன்னுடல், பொருள், ஆவி யாவற்றையும் படைத்தவனுக்கே அர்ப்பணித்த தியாகத்தின் மங்கள உருவம். அவர் தம் வாழ்நாளில் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி, ஆசனக்கோவில், நாரந்தனை, பண்டத்தரிப்பு, தோலகட்டி, முல்லைத்தீவு, வென்னப்புவ, புத்தளம் முதலாமிடங்களில் தேவதிருத்தொண்டாற்றினார். தாம்மேற்கொண்ட திருமறையை எல்லோரும்மகிழ இனிதுசெய்து முடித்ததந்தை எம்மைவிட்டு மறைந்துவிட்டார். பல்லாயி

(மறுபக்கம் பார்க்கவும்)

## அகுஸ்தீன் எந்தாதையரே

பச்சைமரம வேரறுந்து பாறிமண்ணில் வீழ்ந்ததுவோ
இச்சையறுத் தோங்கியமெய் இச்செகத்தில் மாய்ந்ததுவோ
சிங்கமெனச் சீறியவாய் சீற்றமெலாம் போனதுவோ
தங்கஅருள் ஞானமொழி தந்ததந்தாய் ஏகினையோ.

அள்ளிஆசி தந்தகரம் அசைவின்றி ஓய்ந்ததுவோ
வெள்ளிமணி ஓசைநின்று வெற்றுடலாய் வாடியதோ
உம்பரனின் பொன்மடியில் உறங்குவது இன்பமென்றோ
அம்பரனை நாடினீரோ அகுஸ்தீன்எந் தாதையரே.

ஆறிடுமோ எங்கள்துயர் ஆரிடமோ கூறிடுவோம்
தேறிடவே எங்களகம் தேவனையே வேண்டிடுவீர்
கண்ணுறங்கும் வேளையிலே காசினியில நின்றுமக்காய்க்
கண்கலங்கும எங்களுக்காய் கைகுவித்தே வேண்டிடுவீர்.

ம. சூசைநாயகம், மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் உலகு

அன்புச் சோதரரே!

இன்னும் ஒருவாரத்தில் வனப்புமிகு வைகாசி மலர்ந்து விடும். வைகாசி என்றதும் வனிதையர் திலகமான தேவ தாயின் திருஉருவே எம்கண்முன் தோன்றுகிறது: எனவே வைகாசியை வரவேற்று வனிதையர் திலகத்தை வாழ்த்திப் போற்றுவோம்.

மனிதவாழ்வில் கவலைகள் பல குறுக்கிட்டு அதனைச் சின்னாபின்னப்படுத்தத் தலைப்படுகின்றன. நெஞ்சுநிறைந்த துயரிலும் அஞ்சாமை வேண்டும். இந்தக் கவலைகளைக்கண்டு நாம் அபலைகள் ஆகிவிடக்கூடாது. இளமைப் பருவத்திலே— அந்த அழகு உருவத்திலே இந்தக் கவலைகள் புகுந்துவிட்டால், அந்தப் பருவத்தையும் உருவத்தையும் பாழாக்கிவிடும்: மேலும் இதன் விபரீதத்தையும் அறுதியிட்டுக் கூறமுடியாது.

ஏன் நினைத்ததை நடத்தியே முடிக்கும் பருவம் இளமைப் பருவம். எதற்கும் அவசரதீர்மானம் ஆகாது. ஆழ்ந்து சிந்தித்தபின்பே ஒரு முடிவுக்கு வரவேண்டும். பாழும் உலகில் வாழவேண்டிய இல்லை — வாழ்ந்து வழிகாட்ட வேண்டிய வாலிப உள்ளங்கள் அழிவுப்பாதையில் செல்லுதல் இளைஞர் குலத்துக்கே இழிவாகும். அனைவரும் ஆக்கப் பாதையில் வீறுநடை போடுவோமாக.

சோதரன்

# நேரமில்லை?

மனிதவாழ்க்கையில் நேரமில்லை என்பது இரத்தத்துடன் கலந்து ஊறிப்போன ஒரு வார்த்தையாகி விட்டது. யாரும் எதற்கும் நேரமில்லை என்ற வார்த்தையை வாழ்க்கையில் அதிகமாக உபயோகிக்கின்றனர்: ஆனால், நமது இளம் சமுதாயத்திலோ நேரமில்லை என்று கூறக்கூட அவர்களுக்கு நேரமில்லை.

ஒரு நாளில் 24 மணித்தியாலங்களை இறைவன் நமக்கு அளித்துள்ளான். ஆனால், இந்த 24மணி நேரத்தில் ஒருமணி நேரத்தை இறைவனுடன் சல்லாபிப்பதிலோ, அவரை நினைப்பதிலோ, அவருக்குத் தொண்டு செய்வதிலோ செலவிட நேரமில்லை.

எமது வாழ்வின் ஒவ்வொரு நிமிடம் பற்றியும் நாம் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதைச் சிந்திக்க எமக்கு நேரமில்லை. போலிச் சாட்டுகள் கூறிப் பொன் போன்ற எம் நேரத்தை மண்ணாக்குகின்றோம். நல்ல நூல்கள், நல்லபொழுது போக்குகள் என்பன இருக்க நமது நேரத்தை வீணாக்குகிறோம். பங்கில் பணிபுரியும் பக்திச் சபைகளில் சேர்ந்து பணிபுரியும்படி கேட்டால், நேரமில்லை என்பதுதான் அவர்கள் பதில்.

எனவே, இளைஞரே! நாம் கழித்த பொன்போன்ற நேரம் எமக்குத் திரும்ப வர மாட்டாது. ஒரு நாளில் ஒரு மணி நேரத்தையாவது இறைவனுக்காக நல்ல காரியங்களில் செலவிட்டு நற்பயன் பெறுவோமாக.

இளவாலை இளவல்.

---

○ இந்தோனேஷியாவில் உள்ள முஸ்லிம்கள் வாழும் மாகாணத்தில் மெல்லிய உடை அணிந்துவரும் மணப்பெண்கள் திருமணம் செய்யப் பதிவுஇலாகா அனுமதி வழங்குவதில்லை. மேற்படி ஆடைகள் இஸ்லாமிய கலாச்சாரத்திற்குப் பாதகம்விளைவிப்பதாக அந்த இலாகா வைச்சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

---

# தம்பிக்குக் கடிதம்

அன்புள்ள தம்பி,

நலம், நலம் மலர்க. உனது கடிதம் கிடைத்தது. தக்க தருணத்தில் யான் எழுதிய கடிதம் நற்பயனைத் தந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். கிறிஸ்தவன் என்பதற்குரிய பொருளை அறிந்து பெருமை கொள்வதாகக் குறிப்பிட்டுள்ள நீ; இன்றைய உலகில் மனிதன் மனிதனாக வாழமுடியவில்லை எனக் குறைபட்டுள்ளாய்.

ஆம் தம்பி,

இன்று யார் மனிதனாக வாழ்கின்றான் என்பதே பெரும் புதிராக இருக்கின்றது. 2500 ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்க நாட்டிலே தியோஜெனீஸ் என்ற மாபெரும் ஞானி வாழ்ந்தார்.

ஒருநாள் அவர் ஏதென்ஸ் நகரின் வீதிகளிலே மனிதனைத் தேடித் திரிந்தார். என்ன உனக்கே ஆச்சரியமாக இருக்கின்றதா? ஆம். கோடைகாலம் பகல் 12மணி. கையில் தீபம் ஏந்திய வண்ணம் வீதிவழியே ஏதோ பொருளை இழந்து தேடுபவர்போற் தேடுகின்றாரே என அந்நகர மக்கள் அனைவரும் அதிசயமும ஆச்சரியமும் கொண்டனர். பெரும் ஞானியாயிற்றே என ஒருவரும் அவரை நெருங்கிக்கேட்க மனந்துணியவில்லை. எனினும் உன்னை ஒத்த இளைஞன் ஒருவர் அவரை நெருங்கிச் சென்று "ஐயா! நடுப்பகலான இந்நேரத்தில் தாங்கள் தீபத்தை ஏற்றி வைத்துக் கொண்டு வீதிவழியே ஏதோ பொருளைத் தேடுவதுபோற் தேடுகிறீர்களே என்ன தேடுகிறீர்கள்" என்று கேட்டான். அப்பெரியவர் இளைஞனைப் பார்த்து: "தம்பி நீ இந்தக் கேள்வியைக் கேட்பாய் என்று எனக்கு முன்பே தெரியும. நான் வெகு நாட்களாகவே மனிதனைத்தரிசிக்க வேண்டுமென்று இந்நாடு முழுவதும் அலைந்துகொண்டிருக்கிறேன்" என்றார். உடனே இளைஞன், "எந்த மனிதனைத் தேடுகிறீர்கள்? என்னிடம கூறுங்கள். நான் அவனை உங்கள் முன் கொண்டுவந்து நிறுத்துகிறேன்" என்றான். அதற்கு அந்த ஞானி "எந்த மனிதனையும் நான்தேடவில்லை. மனிதனையே தேடுகிறேன். இதுவரை அவன் என் கண்களுக்குப் புலனாகவில்லை. ஆகவேதான் தீபத்தை ஏற்றி வைத்துக் கொண்டு சென்றால் ஒருவேளை புலப்படலாம் என்று நினைத்து இந்த நகரத்தின் வீதிகளில் அலைந்து கொண்டு இருக்கிறேன்" என்றாராம்.

தம்பி,

இந்நிகழ்ச்சி எத்தனை உண்மைகளை நமக்குக் கற்பிக்கின்றது என எண்ணிப்பார். நாம் இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்து மறுவுலகில் நித்தியபேரின்பத்தை அடையவேண்டுமென்றுதானே; ஆண்டவரும் தம்பாடுகளாலும மரணத்தாலும் உயிர்ப்பாலும் நம்மை மீட்டார். இறையன்பில் என்றும் நிலைத்திருக்கவேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் நாமோ அவராக — அல்லது அவர் வாழ விரும்பும் மனிதனாக வாழ்கின்றோமா? சற்றுச் சிந்தித்துப் பார்.

தம்பி,

தபசுகாலங்களில் எத்தனை தீர்மானங்கள் எடுத்தோம். எண்ணிப்பார். என்னாலும் சரி உன்னாலும் சரி ஒன்றையாகுதல் நிறைவேற்ற முடிகின்றதா? இல்லையே. எனவேதான் நாம் இதுவரை மனிதர்களாக வாழவில்லை—வாழ முடியவில்லை

என்ன துன்பம் நேர்ந்தாலும்—துயரம்வந்தாலும் எடுத்ததீர்மானங்களை நிறைவேற்றி, இதுதான் இறைவன் திருவுளம எனவாழ்வாங்கு வாழ்ந்த புனிதர்களின் வரலாற்றை எடுத்துப்பார். அவர்கள் நம்மைப்போல் இவ்வுலகில் வாழ்ந்தவர்கள்தான்; எனினும் தமது ஐம்புலன்களையும, ஐம்பொறிகளை அடக்கி இறைவன் சித்தம் இதுதான் எனவே இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழ்ந்தவர்கள். ஆனால், நாமோ; இவ்வுலகில் எப்படியும வாழலாமென்று எண்ணி வாழ்பவர்கள். இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழும் மனிதன் உண்மையான மனிதன். அத்தகைய மனிதனைத்தான் அன்று தியோஜெனீஸ் என்ற மாபெரும் ஞானி வீதிகளிற் தேடித் திரிந்தார். ஆனால், இன்று அந்த ஞானி இலலை. எனினும் நமது தாயாகிய திருச்சபை தனது பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் இதனையே எதிர்பார்க்கின்றதல்லவா? "வாழ நினைத்தால் வாழலாம்" என்ற திரைப்படப் பாடல்அடி எவ்வளவு பொருள் பொதிந்த அடியாக விளங்குகின்றது. தம்பி; கடிதம்நீண்டுவிட்டதென எண்ணுகிறேன். அண்ணா எழுதியுள்ளதைப்பற்றி என்ன நினைக்கிறாய் என்பதை உனது கடிதத்தில் இருந்து நான் அறிந்து கொள்வேன்தானே.

வணக்கம் பல,

உன் அன்புள்ள
அண்ணா

# குருத்துவாபிஷேகம்

நிகழும் சித்திரை 26-ந்தேதி புதன்கிழமை காலை 7-30 மணிக்கு யாழ்ப்பாண ஆசனக்கோவிலில் இருவர் குருப்பட்டம் பெறுவர். இவர்கள் யாரெனில்,

**அருள்திரு எஸ். டேமியன், ஓ. எம். ஐ.**

**அருள்திரு பற்றிக் ஞானப்பிரகாசம், ஓ. எம். ஐ.**

அருள்திரு டேமியன் இளவாலை ட. சூசைப்பிள்ளை தம்பதிகளின் புத்திரர். இவர் இளவாலை சென் யேம்ஸ் ஆலயத்தில் தமது முதற்பூசைப்பலியை இம்மாதம் 29-ந்தேதி காலை 7-30 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

அருள்திரு ஞானப்பிரகாசம் தமது முதற்பூசைப் பலியை நெடுந்தீவு சென் யேம்ஸ் ஆலயத்தில் இம் மாதம் 27-ந்தேதி காலை 10-30 மணிக்கு ஒப்புக் கொடுப்பார். இவ்விரு புதிய குருப்பிரசாதிகளையும் தேவன் ஆசீர்வதிப்பாராக.

# பூசை வழிகாட்டி
## சித்திரை—1972.

24. திங்கள்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 11: 1—18
அரு. 10: 11—18.

25. செவ்வாய்: புனித மாற்கு [சி]
**வாசகங்கள்:** 1இரா. 5: 5—14
மாற்கு 16: 15—20

26. புதன்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி. 12: 24—13: 5
அரு. 12: 44—50.

27. வியாழன்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 13: 13—25
அரு. 13: 16—20.

28. வெள்ளி: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 13: 26—33
அரு. 14: 1—6

29. சனி: புனித கத்தறீனம்மாள் [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 13: 44—52
அரு. 14: 7—14.

30 ஞாயிறு: பாஸ்கா காலத்தில் 5-ம் ஞா. [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 6: 1—7
1இரா. 2: 4—9, அரு. 14: 1—12.

# எங்கள் அறிமுகம்

நான் க. பொ. த. சாதாரண பரீட்சை (விஞ்ஞானம்) எழுதியுள்ளேன். "முயற்சி திருவினையாக்கும்" என்பது சான்றோர் கூற்று: நான் முயற்சியுடன் படித்ததினால் எனக்கு நல்ல முடிவு வரும் என்ற நம்பிக்கை உண்டு. நான் தற்போது ஆங்கிலதட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் பயின்று வருகிறேன். மறை ஆசிரியையாய் வரவேண்டும் என்ற ஆசை எனக்குண்டு. முயன்று என்னுடைய இந்த அவாவை நிறைவேற்றுவேன். எனக்குக் கட்டுரை எழுதுவதில் நாட்டமுண்டு. ஓய்வு நேரங்களில் பத்திரிகை, புத்தகங்கள் வாசித்தல் போன்றவற்றைச் செய்து வருகிறேன். நண்பிகளுக்கும் மடல் எழுதுவேன். சிறு பிள்ளைகளுக்குப் படிப்பித்துக் வருகிறேன். எனக்குக் கல்வியைத்தொடர வேண்டுமென்ற ஆவலும், வேலைசெய்து பணம்சம்பாதிக்க வேண்டும் என்ற ஆவலுமுண்டு. ஆனாலும் இரண்டில் ஒன்றை நிறைவேற்றுவேன்.

செல்வி கத்தரின் பெர்னாண்டோ
கொழும்பு—13

**வெளிவந்துவிட்டது!**
**கத்தோலிக்க திருமறை விளக்கம்**
முதலாம் பாகம்
கிடைக்குமிடம்:
**புனித சூசைமாமுனிவர் அச்சகம்,**
யாழ்ப்பாணம்.

# பாமபதமடைந்த...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

ரம் மக்களுக்கு ஞானஒளிதந்த நம் நந்தாவிளக்கு அணைந்துவிட்டது. வேதபோதகமருளிய வெண்கலக் குரல் அடங்கிவிட்டது. ஞான கீதம்பாடிய எக்காளத்தின் இனியதொனி மங்கிவிட்டது. ஆசியருளிய திருக்கரங்கள் அசைவற்றுவிட்டன, ஆழ்ந்த மௌனத்தில் அவர் அமிழ்ந்துவிட்டார்:

"நீ என்னைத்தேடு சகலமும் உன்னைத்தேடும்" என்று திருவாய்மலர்ந்த தேவன், அவரது நாமம் வாழ தன் வாழ்நாள் முழுவதையும் 80 ஆண்டுகள்வரை தியாகம் செய்த எங்கள் புனித குருவருக்கு சன்மானம்தந்து நித்தியபரலோக சீவியத்தை ஈந்தருள அவர்தூய மலரடியிணையைப் பிரார்த்திப்போமாக.

பி. ஜே. அமிர்தநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மறைந்தவர் எங்கே ?**
**கத். வானொலி நிகழ்ச்சி**
23-4-72 ஞாயிறு
பி. ப. 7-00—7-30
தயாரிப்பாளர் :
மறைஆசிரியர் :
M. யேசுதாஸ்
மானிப்பாய்.

## பாராட்டுகிறோம்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிப் பழைய மாணவரும், வட இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளன ஆரம்ப நிர்வாகிகளில் ஒருவருமே, வடமாகாண அச்சிடுவோர் சங்க தனதிகாரியும், விவேகானந்தா திருக்குறட் கலண்டர்—டயறிகள் தயாரிப்பு உரிமையாளரும், மேற்படி அச்சக முதல்வருமான திரு. வே. கந்தசாமி அவர்களுக்கு அண்மையில் ஆலயபரிபாலனசபையினர் சைவப்புலவர் என்ற பட்டத்தை வழங்கிப் பொன்னடை போர்த்துக் கௌரவித்தனர். அன்னருக்கு எமது பாராட்டுக்கள்.

● உலகிலேயே முதன் முறையாகக் கண்ணாடி இழையுடனான பிளாஸ்ரிக் போர்க்கப்பல ஒன்று பிரித்தானியில கட்டிமுடிக்கப்பட்டுள்ளது, 153 அடி நீளமுள்ளதாய் இதுவரை பிளாஸ்ரிக் போர்க்கப்பல எதுவும் கட்டப்படவில்லை. கப்பல்கட்டும் நுட்பத்தில் பெரும் மாறுதலை உண்டு பண்ணியுள்ள இந்தக்கப்பலின் வெள்ளோட்டம் வருகிற ஆவணிமாதம் நடைபெறவிருக்கிறது.

● அமெரிக்க புதியஜனாதிபதித தேர்தல் இவ்வருட இறுதியிலே நடைபெறவிருக்கிறது. அதனால் இப்போது அங்கு தேர்தல் காற்று மும்முரமாக வீசிக்கொண்டிருக்கிறது. தற்போது அங்கு நடைபெறும் பூர்வாங்கதேர்தலின் முடிவில் ஜனநாயக கட்சியின சார்பில் செனற்றர் எட்மண்ட்மஸ்கியும், குடியரசுக்கட்சியின் சார்பில் திரு. நிக்ஸனும் போட்டியிடுவார்களென நம்பப்படுகிறது.

● அக்காலத்திலே உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்ருக எடுத்துக் கூறப்பட்ட இத்தாலிய தேச பீசா நகரின் சரிந்த கோபுரம் நாளுக்குநாள் சரிந்துகொண்டே வருகிறது. அது சரிந்து கொண்டுபோகும் விகிதத்திலிருந்து 1974ஆம் ஆண்டுக்கு முன் தரையில் விழுந்துவிடுமென்று நிபுணர்கள் கணக்கிடுகின்றார்கள்.

● தேநீரைக் காட்டிலும் காப்பிப்பானம் தேகாரோக்கியத்துக்கு அதிகம் கேடு விளைப்பதாகுமென்று ஜெயிப்பூரிலுள்ள எஸ். எம். எஸ். வைத்திய கல்லூரியின் நோய்த்தடுப்பு— சமூகமருத்துவப் பேராசிரியரான டக்றர் இராமேஸ் சர்மா கூறுகிறார். தேநீரில் அடங்கியுள்ள புளோரைட் எனும் பொருள் இருதய நோய்களைத் தடுக்கும் ஒரு பாதுகாப்பாகுமென்றும் அவர் தெரிவிக்கின்றார்.

**விமர்சனம்:** (ஐயா யோசவ்)

# திருப்பாடுகளின் காட்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

'ஹைப்பாஸ்' வேடத்தில் நடித்தவர் மிக நன்ருகப் பாத்திரத்தை உணர்ந்து நடித்தார். பாராட்டப் படவேண்டிய நடிப்பு. ஒரு கைதேர்ந்த நடிகரின் முத்திரை அவரில் தெரிந்தது. சிம்மக் குரலில் அவர் பேசிய பேச்சுக்கள் அப்பப்பா, அருமை, அருமை. 'யூதாஸ்' நன்கு நடித்தார். பாவச்சோதனைக் காட்சியில்நடிப்பு களைகட்டியது. 'செனட்' சபையினர் நன்ருகவே தமது பாத்திரங்களைச் செய்தனர். ஆனல், அவருள் தோற்றப் பொலிவுமிக்க ஒருவரின் குரலில் கம்பீரம் தெரியவில்லை—அவருக்கு வேடப் பொருத்தமும் ஒத்துழைக்கவில்லை. 'பிலாத்து'மிக நன்ருகவே பேசி நடித்தார். பாராட்டப்பட வேண்டியவர். அவரின் தொனி எடுப்பாக அமைந்திருந்தது. இவரின் வருகைக்காக எழுப்பப்பெற்ற வாத்திய இசை மிகவும் ரசிக்கக்கூடியதாக அமைந்திருந்தது.

'ஏரோது' அரசனகத் தோன்றியவர் நன்ருக நடித்தார். வேடப் பொருத்தம் அருமை. ஏன் தான் வலிந்துவலிந்து சிரித்து தற்காலத் தமிழ்ப்படஉலக வில்லன்களை நினைவுபடுத்த வைத்தாரோ விளங்கவில்லை. கோவிலில் வியாபாரம் நடைபெறுகிறது. அங்குவந்த யேசுநாதர் சுவாமிகள் கோபங்கொண்டு, "எனது பிதாவின் வீட்டைக் கள்வர்குகை யாக்காதீர்கள்" என்று இடையில் கட்டியிருந்த கயிற்றினுல் வியாபாரிகளைச் சாடுகிருர். அது நியாயமானது. ஆனல், எதுமறியாது திகைத்து நிற்கும் ஆட்டுக்குட்டிக்கும் வலிந்து அடிக்கிருரே. இதன் அர்த்தம் யாருக்குமே புரியாத ஒன்று.

அடுத்ததாக வசனநடை குறித்துச் சிலசொல்லவேண்டியது முக்கியமாகும். ஆங்காங்கே நிகழ்ச்சிக்குப்பொருத்தமில்லாத உண்மைக்கு முரணை வசன அமைப்புகள் கையாளப்பட்டன. உதாரணத்திக்கு ஒன்றினைச்சுட்டிச் சொல்வேன். யூதாசுக்கும், பரிசேயனுக்கும் நடைபெற்ற உரையாடலில் பரிசேயன் கூறுகிருன் 'யூதாஸ் நன்ருக யோசித்துப் பார்... நீ பெரிய உயர்ந்த கல்விமான்; ஆற்றல்கள் பலமிக்க அறிஞன். நீ செய்வது நன்மையான காரியமாகவே உனக்குப்படும்' என்றவாறு வசனம்அமைகிறது. வரலாற்றில் யேசுநாதர் சுவாமிகள் சாதாரண படிப்பறிவற்ற பாமர ஏழை மீனவர்களையே தமது சீடர்களாகக் கொண்டார்எனும் உண்மை யாவரும் அறிந்த ஒன்று. ஆகவே, உண்மைக்குப் புறம்பான வசனங்களில் விழிப்பு அவசியம்.

கடைசியாகச் சிரமமான இந்தப் பாரிய வேலையைத் திறம்படப் பொறுப்பேற்று நிரைப்படுத்தியவரை (Director) மிகவும் பாராட்டுவது பொருத்தமாகும். அவரின் பொறுமையான கடமைதான் மேற்படி திருப்பாடுகளின் முழுமை என்பதோடு, யாழ். ஆசனக்கோவில் கட்டளைக்குரவர் வண. ஜோய் கிறிசோஸ்தரம் அடிகளாரின் கூடிய ஆக்கமும் ஊக்கமும் தளராத உழைப்பும் 'திருப்பாடுகளின் காட்சியின்' முழுமையான வெற்றிக்குப் பின்நின்று உதவியிருக்கிறது என்றுநாம் ஊகிப்பதில் எவ்வித தவறுமில்லை. வாழ்க! வளர்க! சுவாமிகளின் கலைத்தொண்டென வாழ்த்துவோம்.

● அமெரிக்க ஜனதிபதி நிக்ஸனிடம் ஒருகார் இருக்கிறது. இதனைச் செய்யச் சென்ற செலவு 6லட்சத்து 40 ஆயிரம் ரூபாவாகும். துப்பாக்கிக்குண்டு பாயமுடியாதவாறு இது அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் அமர்ந்து கொண்டு பின்னல் வரும் காரில் இருப்பவர்களுடன் இரகசியமான விஷயங்களைத் தானும் பேசலாமாம்.

● வடஅயர்லாந்தின் ஆட்சிகிர்வாகத்தைப் பிரித்தானிய அரசாங்கம் கோடியாகப் பொறுப்பேற்றுக் கொள்ள வழிபண்ணும்புதிய மசோதா இருபது மணிநேர விவாதத்தின்பின்னர் பிரித்தானிய பாராளுமன்றத்தால் அங்கிகரிக்கப்பட்டுளளது. மகாராணியாரும் இந்த மசோதாவுக்கு உடனடியாக அங்கிகாரம் அளித்திருக்கின்ருர்.

● யூதர்களின் இஸ்ருயேல் நாட்டுடன் போரில் இறங்கும் முடிவை நாம் ஏற்கனவே செய்துவிட்டோம்; இப்போது நேரத்தைமட்டும் காத்திருக்கிருேம்; யுத்தத்தில் இறங்கும் எமது முடிவு இனி மாற்றவே முடியாததாகுமென்று எகிப்திய ஜனதிபதி அன்வர் சாதாத் போர்முழக்கஞ் செய்திருக்கின்ருர்.

பெற்ற தந்தைக்குச் செவிகொடு; கிழவியென்று உன் தாயை இகழாதே.

நீ. மொ. 23: 22

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

### பருதுவேயில் ....

அவர் செய்துவந்த சமூகத் தொண்டுதான். அவர் சில்லி தேசத்திலிருந்து ஆகாயவிமானமார்க்கமாக நாடு திரும்பியபோது, அவரைக் காத்திருந்து, கொமியூனிஸ்தர் எனத் தூஷித்து அவரது பெட்டிகளை சோதித்த போது, அவர் வசமிருந்த தென்அமெரிக்க மேற்றிராணிமாரது சமூகத்தொண்டுத் திட்டப் பிரதிகளும், பருகுவேநாட்டு சமூகமுன்னேற்ற சங்கத்திட்டப் பிரதிகளும் கைப்பற்றப்பட்டன. குருவானவர் உடனடியாக தேசத்துரோகியெனக் குற்றஞ்சாட்டப்பட்டு அத்தேசத்திலிருந்து துரத்தப்பட்டார்.

### நன்றித் துதி

திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், பரி சதாசகாயமாதா, அர்ச். யூதாததேயு இவர்களின் மன்ருட்டினுலும் எனது மகளின் முதற்பிரசவம் யாதொரு விக்கினமுமின்றி நடைபெற்றதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பிரசுரிக்க தாமதமானதற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

ஓர் அடியாள்

குருநகர்

✠

அமிர்தநாதர் சூசைப்பிள்ளை அவர்களின்

**3-ம் வருட மரண ஞாபகம்**

மறைவு: 27-4-69

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நிசழும் சித்திரை மாதம் 27-ந்தேதி வியாழக்கிழமை காலை மிருசுவில் புனித நீக்கலஸ் ஆலயத்தில் துக்கப்பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படுமென்பதை உறவினர், சிநேகிதருக்குத் தயவுடன் அறிவித்துக் கொள்ளுகின்றேம். இதனைக் கண்ணுறும் அனைவரும் இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்கின்றேம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மிருசுவில்

✠

எட்வின் சவரிமுத்து அவர்கள் அமரத்துவமடைந்த

**31-ம் நாள் மரண ஞாபகம்**

"சீவியத்தில் நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்."

எனது நேசபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய திரு. எட்வின் சவரிமுத்து அவர்கள் அமரத்துவ மெய்திய 31-ம் நாள் சித்திரைத்திங்கள் 30-ம் நாள் பூர்த்தியாவதால் அதற்கு முதனுள் 29-4-72 சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு அன்னரது ஆன்மா சாந்தியுற அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை நிறைவேறும். இதனைக் கண்ணுறுவோர் அவரது ஆன்மா சாந்தியுற வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிருேம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், தாயார், மற்றும் உறவினர்.

'மரீனு வில்லா'
அச்சுவேலி.

### நன்றி

எனது அருமைக்கணவர் திரு. அல்பேட் செல்வரட்ணத்தின் ஆத்தும இளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம் பரி. அடைக்கல மாதா தேவாலயத்தில் 10.4-72இல் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில் ஒன்றுசேர்ந்து பிரார்த்தித்துக்கொண்ட உற்ருர், அன்பர் யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இரட்ணேஸ்வரி செல்வரட்ணம்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனக்குக் கொஞ்சக் காலமாக இருந்துவந்த தொண்டைவருத்தம் பிறேக்கர புதுமைப்பாலனிடமும், புனிதர்களான சதாசகாயமாதா, யூதாததேயு, அந்தோனியார், சூசையப்பர் இவர்களிடமும் நான் கேட்டுவந்தபடி நல்லசுகம் கிடைத்தது. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். இவர்கள் நாமம் புகழப்படுவதாக.

நாரந்தனை சு. ச.

✠

திருமதி மேரி சலோமை ஞானப்பிரகாசம் அவர்களின்

**முதலாண்டு மரணநினைவு**

மறைவு: 21—4—72

ஓராண்டுகாலம் கழிந்ததுவே
தாயே! எங்கள்
உள்ளமதில் மூண்டகனல்
ஆர்ந்ததில்லை
நீராண்ட கண்களோடு
நெஞ்சம் வெந்து
நீருகிப் போகிலுமுன்
நினைவு போமோ
சீராண்ட எம் தந்தை
ஞானப்பிரகாசத்தையும்
சிந்தித்தே வாடுகின்ருேம்
தந்தையே!
பேராண்டு வாடாத
ஜோதிகளே தங்கள்
பேரான மக்கட்காய்
வேண்டுவீரே!!

என்றும்எங்கள் மனதைவிட்டு நீங்காத எங்கள் அருமைத் தாயார், திருமதி மேரி சலோமை ஞானப்பிரகாசம் அவர்கள் இம் மண்ணுலகைவிட்டு விண்ணுலகெய்திய முதலாம் வருடம் 21-4-72இல் பூர்த்தியாகிறது. அன்றையதினம் மிருசுவில் சந்நீக்கலார் ஆலயத்தில் துக்கப்பூசை நிறைவேறும். அவர்களிருவரினதும் ஆன்மசாந்திக்காகச் செபிக்குமாறு வண குருமார், சந்நியாசினியர், அன்பர்கள் அனைவரும் கேட்கப்படுகின்றனர்.

"இரக்கமுள்ள யேசுவே அவர்கள் மீது நித்தியஒளி ஒளிரக்கடவது."

பிரிவால் துயருறும் மக்கள்:
திருமதி மேரி ரோசம்மா நிக்கலஸ் (ஆசிரியை மிருசுவில்), சங். சிஸ்ரர் மேரி சென்போல் (தி. கு. க. நாரந்தனை), திரு. ஜே. ஜி. எம். இராஜரட்ணம் (கல்வி அலுவலகம், யாழ்நகர்), திரு. ஜி என் ஸ்ரனிஸ்லாஸ் (சௌக்கிய சேவை அலுவலகம், கொழும்பு). மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

✠

**1-ம் வருட மரண ஞாபகம்**

**மேரி ஞானமணி அந்தோனிமுத்து**

"சீவியத்தில் நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்."

1971ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24-ந்தேதி தேவன் தம்முடன் அழைத்துக்கொண்ட அவரது அடியாளாகிய மேரி ஞானமணி என்பவவை நினைவு கூருவோமாக. இவவுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக இம்மாதம் 24-ந்தேதி வல்வை புனிதசெபஸ்தியார்ஆலயத்தில் துக்கப்பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் அனைவரையும்இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளத் தாழ்மையுடன் வேண்டுகிருேம்.

ஆண்டவரே உமது அடியாளாகிய மேரி ஞானமணியின் மேல் நித்தியஒளி ஒளிர்வதாக— சமாதானத்தில் இளைப்பாறுவாவாக.

பிரிவினுல் துயருறும்:
சூ. தொ. அந்தோனிமுத்து
தங்கத்துரை குடும்பம்.

வல்வெட்டித்துறை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஆல சித்திரை மாதம் 22-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300. தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org